எனக்கும் எனக்கும் - 1

நானே மூளையாய் இருக்கையில்
உள்ளே முளை விடும் பயிரே!
மூலைக்குள் முடங்காமல் மூளையின்
மூலத்தையும் கலக்குவையே யார் நீ?

நான் மனமா? நீ எண்ணமா?
நான் உயிரா? நீ உடலா?
நான் இயல்பா? நீ உணர்வா?
நான் சிந்தனையா? நீ செயலா?

நான் இயக்கமா? நீ உறக்கமா?
நான் தீவா? நீ கடலா?
நான் மலையா? நீ முகிலா?
ஏன் அடிக்கடி தீண்டுகின்றாய்?

நானும் நீயும் வெவ்வேறா?
நானென்றால் நீ தானே?
நீயென்றால் நான் தானே?
நானும் நீயும் ஒன்றோ?

நானும் நீயும் ஒன்றாதல் சொல்!
நானும் நீயும் நாமாதல் அல்ல
நானும் நீயும் தனியே அழிந்து
நாமும் சேர்ந்து அழிந்தால் ஆகும்!

எனக்கும் எனக்கும் - 2

என்னில் சரி பாதியே!
எனக்கு சரி ஜோடியே!
கேட்பேன் சில கேள்வியே
சொல்வாயோ ஒரு பதிலையே?

திங்கள் தோறும் பாருக்கு உண்டு
மங்கலத் திருவிழா யாரும் மகிழ
அங்கமே மலர்ந்து ஆரவாரம் புரிய
திங்கள் வருமட்டும் கூடி மகிழ்ந்து

இல்லந் தனிலேநீ இருந்து கிடப்பதென்ன?
ஆதவன் என்றேனும் விடுமுறை விட்டதுண்டா?
மலர்கள் என்றேனும் மலரா திருந்ததுண்டா?
எறும்பு என்றேனும் சோம்பித் திரிந்ததுண்டா?

இவ்வளவேன்?
பேருந்து ஓட்டுநர்?
குப்பை பொறுக்குவோர்?
சிறு வியாபாரி?
இவருக்கில்லையோ திருநாள்?

உனக்கு மட்டும் ஏன் இங்கே ஓய்வு?
உனக்கு மட்டும் தான் இருக்குமோ வீடு?
உன் சந்தோசம் அடுத்தவர் கேடு?
உனக்கு மட்டுமா உலகம்? - தேடு!

சுயநலமே எங்கும் காணக்கிடைக்க
சுயமற்று இருப்பது எங்ஙனம்?
வியப்பு கொட்டி என்னைக்
கயமை கொண்டு பழிக்கிறாயே!

சமமாய் அந்நியோன்யமாய் இருப்பான்
என்றே சாமான் னியமானவனை
மந்திரியாக்கினாய் அவனோ -
சமமாய் இல்லாவிட்டால் பரவாயில்லை
அந்நியனாய் மாறி விட்டானே!

எனக்கும் எனக்கும் - 3

பருவம் செழித்து கனியைப் பலனாய்த்
தரும் நெடுதுயர் மரத்தைப் பார்த்தாயா?
உருவமா அழகு; மலர்வாசம் சென்றே
துருவம் மட்டும் வண்டை ஈர்க்குமே?

மலருக்கு வேலி முள்ளானால் கரு
வேலத்திற்கு மலரே முள் அல்லவா?
ஞாலம் முழுதும் நன்றாய்த் தேடினாலும்
காலந் தன்னில் பயனாகாப் பொருளுண்டோ?

உன்னால் இங்கே யாருக்கு யாதுபயன்?
பெயரென்ன என்றால் சொன்னாயே ஒன்று!
மனசாட்சி? சிரிப்பு வருகின்ற தப்பனே!
தப்பதுவே செய்யும் போதெங்கே சென்றாய்?

தேமே என்று பார்ப்பதுன் வேலையா?
செய்யும் முன் சொன்னால் என்ன?
செய்கின்ற போதே மறித்தால் என்ன?
செய்யத் தூண்டும் நீயா மனசாட்சி?

செய்தபின் உறுத்துவது நீபோல் தெரியலியே
அடுத்தது செய்ய மீண்டும் தூண்டுகின்றாயே?
வினைச் சங்கிலி அறுத்தெறியவா உதவுவாய்?
சங்கிலியின் இணைப்பே நீதான் என்றறிந்தேன்.

எனக்கும் எனக்கும் - 4

நீயும் நானும் தூரம் தூரமா?
நீயும் நானும் பக்கம் பக்கமா?
ஒத்ததைச் செய் கையில் பக்கம்
ஒவ்வாது செய் கையில் துருவம்

ஓ! அப்படியானால்,
இயக்கத்தை நிறுத்தினால் நிலை என்னவோ?
மாந்தர் தயாரிப்பில் ரயில் வண்டிகண்டாயா?
அதன் தண்டவாளம் போல் இணைந்தே
இணையாதிருப்போம்!

இயக்கத்தை நிறுத்துவ தெவ்வாறு?
இயக்கத்தை நிறுத்தினால் மரணமன்றோ?
இயக்கமன்றோ உயிர் வளர்க்கும் இயந்திரம்?
உய்வோமென் றெனை மாய்ப்பதோ தந்திரம்?

இயக்கத்தை நிறுத்தவா சொன்னேன்? மண்டு!
இயக்கத்தை நிறுத்த வேண்டிய தில்லை!
இயக்கத்தில் நிறுத்தா திருப்பாய் உன்னை!
இயங்கு! ஆனால் இயக்கத்தில் நிறுத்தாதே!

ஒன்றும் புரியவில்லை!
புரியாமல் சொன்னால் தான் தத்துவமோ?
குறிப்பாய் ரயிலதையே எடுத்துக் காட்டி!
விரித்துச் சொல்கின்றேன் கேட்பாயா கொஞ்சம்?

எனக்கும் எனக்கும் - 5

ரயிலை வைத்து எனக்குப் பாடமா?
உயிரற்ற வண்டி சொல்லு மோநூல்
பயின்ற எனக்கு அதில் கல்லாததை?
முயன்று தான் பாரேன் முடிந்ததை?

ஏதோ சொல்கின்றேன் கேள் தெரிந்ததை
கதையென்று சொல்ல வில்லை காண்
எள்ளாதே உலகில் எதையுமது சொல்லும்
பாடமென்ன சற்றே கவனித்துக் கொள்.

பாரில் பூச்சிய அறிவு முதல்
தேரி லேறும் ஆறறிவு வரை
ஏரிக் கரையாய்க் கண்டவ்னா நீ?
மாரி யாய் யாண்டும் ஆசா னாயறி.

இப்போது ரயில் சொல்லும் கதையைத்
தப்பாமல் கவனி! ரயிலது செல்வது
எப்போதும் தண்டவாள மதில், ஆனால்
எப்போது வெளித் தொடர்பதற்கு யோசி!

இதென்ன கேள்வி? ரயிலுக்கு மக்களால்
வெளித் தொடர்பு நிற்கும் போதேதான்
அப்படி வா அப்பனே என்வழிக்கு!
இயக்கத்தின் போது யாருடன் தொடர்பு?!

எனக்கும் எனக்கும் - 6

வெளியுலகத் தொடர்பேது மற்று ரயில்
நெளிந்தே தண்ட வாளமதில் செல்லும்
களித்தே ஒழுங்கின்றி வெளித் தொட்டால்
விளிக்க வொண்ணா விபத்தில் முடியுமே!

இனியழகு ரயில் சொல்லும் பாடங்கேள்!
இனிதாய் செயலது டல்புரி யும்போதே
முனிவனாய் நம்மீது மட்டும் நிறுத்தி
இனிவினை விபத்துத் தவிர்த் துதவு!

கேட்க நன்றாய் இருக்கிறது நண்பனே,
வேட்கை கொண்டு நான் அலைவதேன்?
வெட்கம் விட்டுக் கேட்கின்றே னியக்கக்
கோட்டை கட்டி அடக்குவதெ வ்வாறு?

சரியாய்க் கேட்டாய் உன்னை அடக்க,
பரியல்ல இங்கே நீயும் நானு மடக்க;
நரியன்றோ நீயுனை முடியுமோ மடக்க?
விரிவிலே எளிதில் முடியுமே கடக்க!

உன்னை மலராய் விரித்தால் அடக்கலாம்
தன்னை அடக்கும் எளியவழி அடங்காமை!
அன்னை அன்பை அடக்காது வழங்கியும்
கன்றாம் மகவின் மேற்கவனம் மாறுமோ?

எனக்கும் எனக்கும் - 7

இயக்கம் இன்றியே இருந்தால் என்ன?
தயக்கம் இன்றியே எனக்குச் சொல்.
முயற்சி ஏதும் செய்யாமலே யாரும்
வியக்கும் வண்ணம் வாழ்ந்தால் என்ன?

நல்ல கேள்வி கேட்டாய் நண்பா!
வில் லதில் புறப்பட்ட அம்புநீ!
மல்ல னுடன் ஆரம்பித்த போர்நீ!
பல்ல துடைபடும் நிறுத்த நினைப்பின்.

குழப்பத் திலகமே! மீண்டும் குழப்பினாய்!
இழக்கவே ஏதுமற்றவன் நான் தானே!
உழவனாய் மாறி உழுதே தவிக்கவோ?
பழக்கமாய் சும்மா இருக்க ஆகாதோ?

சும்மா இருப்பது அத்தனை சும்மாவா?
அம்மா பையிலாவது சும்மா இருந்தாயா?
பம்மாத்து பண்ணாமல் கேள் சொல்வதை!
சும்மாவே ஊஞ்சலும் கப்பலும் சொல்வதை!

அட!
ஆடும் ஊஞ்சலும்
ஓடும் கப்பலுமா?
சொல்லட்டும் பதில்
கேள்வி இதுதான்!
சும்மா இருந்தால் என்ன?

எனக்கும் எனக்கும் - 8

சாய்ந்தாடும் மகிழ்வு தரும் ஊஞ்சலும்
பாய்ந்தோடும் பரவி வரும் கப்பலும்
ஆய்ந்திங்கே சொல்லும் பல தத்துவம்
மாய்ந்திடா வழியுந் தெரியும் நிச்சயம்.

கலத்துக்குக் கரையிலே பாதுகாப்புண்டு
கலத்துக்குச் சலத்திலே அழிவுமுண்டு
கலமதை நினைத்துச் சஞ்சலத்தில்
நிலத்திற் கிடந்தால் பலனுண்டோ?

தன் கதையைச் செப்பும் ஊஞ்சலும்
இன் முகமாய்க் குழந்தை யாடும்போது
முன் னோக்கிச் செல்லும் தூரம்மட்டும்
பின் னோக்கியுஞ் செல்வதைப் பாரென்றே!

ஆடியடங்கிப் போன பின்னே ஊஞ்சலும்
ஓடியடங்கிய கப்பலும் நிம்மதி தானானால்
தேடியார் வருவா ராடா ஊஞ்சலை?
நாடியார் வருவா ரோடாக் கப்பலை?

வாழ்வதில் இன்பத்தி னளவே துன்பமுண்டு
ஆழ்ந்திங்கே சொல்லுவது ஊஞ்சல் காண்
ஊழ்கடலாம் ஆழ்கடலில் கலம் போலே
ஏழ்பிறப்பும் ஓடிடவே கலமும் காட்டும்.

எனக்கும் எனக்கும் - 9

புரிந்தது போல் தோன்றும் நீசொல்லும்
அரியபல தத்துவ மதைநித்தம் அறிந்தும்
கரிய மேகமாய் நிகழ்வுகள் வருகையில்
சரியெது தவறெது தெரியாது தவிக்கிறேன்.

அதற்கும் வழியுண்டு இங்கே சொல்வேன்
எதற்கும் ஒருதாரண மாயெடுத்துக் காட்டிக்
குதர்க்கமாய் எதையும் எடுக்கா வண்ணம்
பதமாய் நாநயத்துடன் நாணயம் சொல்வதை!

நாணயத்தில் என்னவுண்டு இங்கே அறிய?
ஆணவத்தால் இதைக் கேட்க வில்லைகாண்
மாணவனாய் அடி பணிந்து விழைகின்றேன்
வீணனேனிடம் ஓர் நாணயமும் இல்லையே!

கதியாய் மாந்தரெல்லாம் பூமியிலே நொந்து
விதியாய்த் தேடும் அரைப் பணத்திலிங்கே
பதிந்து வைத்த சுவடுகளாய் இருக்கின்ற
மதிப்பதுவே நாணயத்தில் எங்குண்டு சொல்?

எங்கென்ற கேள்வி ஏனிங்கே மதிப்புக்கு?
பங்கமில்லாப் பணத்தின் மதிப்பைக் காண
அங்கமாம் நாணயத்தின் புறம் ஒன்றில்
தங்கமாம் எண்ணடித்துப் பதித்திருப்பர் காண்!

எனக்கும் எனக்கும் - 10

ஒருரூபாய் நாணயத்தின் மதிப்பு அங்கே
உருவமாய் ஒன்று என்னும் பதிப்பில்
இருப்பதாய் நீயிங்கு நினைத்தால் தவறு!
துருவமாய் மறுபக்கம் அரசின் முத்திரை

இல்லாவிடில் நாணயம் செல்லாக் காசு
கல்லாத பாமரனும் அறிவான் இதை
சில்லென் றுந்தன் மனம் உவப்பளிக்க
சொல்கின் றெனிப்போ ததன் தன்மை

முன்பக்கம் காட்டுகின்ற நாணயத்தின் மதிப்பு
உன்பக்கம் நீசெய்யும் வினையின் மதிப்பே!
பின்பக்கம் காட்டுகின்ற அரச முத்திரை
தன்பக்கம் இறைவனின் ஜோதி முத்திரை

சரியோ தவறோ அவனுக்கும் பாதிபங்கு!
விரித்துச் சொல்ல ஏதுண்டு இனியிங்கே?
புரிந்து கொள்வாய் வினையிறைத் தொடர்பு
மரித்துப் போயினும் தொடர்ந்தே வருமே!

இறைவனின் முத்திரை ஜோதி என்றாயே?
பொறையுடன் எனக்கு விளக்க லாகுமோ?
உறையிற் கத்தியைச் சொருகுதல் போலே
மறையான் ஒளியிரண்டின் தன்மை பரப்பு.

எனக்கும் எனக்கும் - 11

வேரில்லா உதிர்வில்லா உயர்வான மரமாய்
நேரில் காணாத உயரொளியாம் பொருளாய்
தேரில் பவனியா யாதவன் போல் அல்லாது
பேரில்லா ஜோதியாய் இருப்பவன் வேறார்?

விளக்கின் ஒளிகொண் டுனக்கோர் அரிய
விளக்கம் தருவேன்; ஒளியின் தன்மை
பிளக்கும் உன்னிட மிருந்து னதுநிழலை
இளக்கமாய் மனதைத் திறந்து கேட்பாய்!

நிழலாய்த் தொடர்வது உந்தன் வினையே!
கிழமாய்ப் போனாலும் விடாது உனையே!
இழந்துயிர் பிரியினும் தொடரும் கடனே!
எழத்தான் நினைக்கினும் விழுவா யுடனே!

தெரியும் நிழலின் காரணமே ஒளிதானே?
புரியாது மனமது உழன்றே தவிக்கிறேன்
எரியும் ஒளியின்றேல் புவியில் தரையில்
விரியும் நிழலேது? இரவில் நிழலுண்டோ?

உண்மை சொன்னாய்; நன்மை சொன்னாய்
கண்ணான ஒளியின்றேல் நிழல் இல்லைதான்!
விண்ணையும் மறைக்கும் இருள் கருநிழலை
மண்ணில் காட்டாது உன்னில் மறைக்கும்!

எனக்கும் எனக்கும் - 12

விழுகின்ற நிழலே வினையாய்ச் சொன்னாய்
எழுகின்ற ஒளியின் அருகே சென்றால்
முழுதும் உலகை மறைக்கும் இருளாய்
இழுக்கும் நிழலது பெரிதாய்த் தெரியும்!

எடுத்துக் காட்டில் தவறோ அறிகிலேன்
தொடுத்துத் தொடரும் கருமை நிழலது
விடுத்துத் தூரமாய் ஒளியை விலகின்
அடுத்துத் தெரியாத் துளியாப் போவதேன்?

இதில் தவறேது மில்லை நண்ப!
பதில் இங்கு தருவேன் நானும்,
விதி வழிப் பயண வாழ்வில்
சதி ஏதும் அவன் செய்வதில்லை.

ஒளியருகில் சென்றால் நிழல் பெரிதாய்த்
தெளிவாய்த் தெரியக் காரணம் சொல்வேன்
இளித்து நீநிழலைப் பார்த்து முதுகை
ஒளிக்கு முழுதும் காட்டுவாய் என்றே!

கொஞ்சம் ஒளிபக்கம் முகத்தைத் திருப்பு
மிஞ்சும் ஒளியின் சொலிப்பில் கண்கள்
கெஞ்சும் அதன் ஈர்ப்பில் வாழ்வெலாம்
நஞ்சாம் நிழலைக் காணவும் கூடுமோ?

எனக்கும் எனக்கும் - 13

உலகாம் நிழலைப் பெரிதாய் நினைத்து
துலங்கும் ஒளியைச் சிறிதாய்ப் புனைந்து
கலங்கும் மனத்தின் எண்ண மதனால்
மலங்கள் நீக்கும் உபாயமும் சொல்வேன்

பங்கம் இல்லா ஒளியது காண்பாய்
மங்கும் தன்மை சிறிது மில்லாது
தங்கும் மனத்தில் வெம்மை யின்றி
தங்கம் உருக்கி ஊற்றியது போலே!

வினை யெனும் விழுதாம் நிழலைப்
பனை யெனும் உயரம் செய்யும்
எனையும் எதையு முருகச் செய்யும்
மனை விளங்கும் ஒளியால் வேரொடு

அந்த வினையைப் பிடுங்கவும் முடியும்
சொந்த வினையைச் சாய்த்த பின்னே
முந்திச் செய்த வினையும் இன்னும்
பிந்திச் செயப் போகும் வினையும்

தெறித்து ஓடும் நிலையது காண்பாய்
வெறித்து ஒளியைப் பாராது கொஞ்சம்
செறிக்கும் வண்ணம் உன்னைக் கொடு!
நெறிக்கு அடங்கி ஒளியா யானதும்

பரவும் நிழலெங்கே செல்லும் யோசி?!
வரவிங்கே செலவே யின்றி வருமே!
விரவும் ஒளியால் நிழலும் இருளும்
இரவும் உண்டோ என்றே கேட்பாய்.

ஒளியின் நடுவில் பொருளென்ன செய்யும்?
அளிக்கும் கருணையில் நிழலே கருவறும்
வெளியென் றொன்றி ல்லா நிலையதில்
ஒளிதனி பொருள்தனி இல்லை யாமே!

எனக்கும் எனக்கும் - 14

கடலாம் ஒளியில் நிழல் இன்றி
உடலாம் மனதைக் குளிப் பாட்டிச்
சுடலாய் பொடியாய் தனை மாற்றி
விடமாம் தொடர் வினை நீக்கு.

உந்தி என்னை வாழ்விக்கும் வகை
தந்த உன்னை மறவாது என்னில்
முந்திச் சொன்ன அறிவ னைத்தும்
சொந்த மாகவே செய்வ தெவ்வாறு?

பகல் இரவு
இன்ப துன்பம்
நன்மை தீமை
தேவர் அசுரர்
மெய் பொய்
செல்வம் வறுமை
மகிழ்வு துக்கம்
விழிப்பு தூக்கம்
பிறப்பு இறப்பு
யோகம் துர்பாக்கியம்
மழை பஞ்சம்
சொர்க்கம் நரகம்
உயர்வு தாழ்வு
மேதமை அறிவீனம்
எண்ணம் செயல்
காரணம் காரியம்

என்றிரண் டிரண்டாய்
இருப்பதன் காரணம்
அறிந்து புரிந்து
விளக்கு கேட்போம்.

எனக்கும் எனக்கும் - 15

பகலோ இரவோ நாள் ஒன்று
இன்பமோ துன்பமோ உணர்வு ஒன்று
நன்மையோ தீமையோ எண்ணம் ஒன்று
தேவரோ அசுரரோ உயிர் ஒன்று
மெய்யோ பொய்யோ சொல் ஒன்று
செல்வமொ வறுமையோ நிலை ஒன்று
மகிழ்வோ துக்கமோ மனம் ஒன்று
விழிப்போ தூக்கமோ புத்தி ஒன்று
பிறப்போ இறப்போ உடல் ஒன்று
யோகமோ துர்பாக்கியமோ விதி ஒன்று
மழையோ பஞ்சமோ இயற்கை ஒன்று
சொர்க்கமோ நரகமோ உலகம் ஒன்று
உயர்வோ தாழ்வோ நிலம் ஒன்று
மேதமையோ அறிவீனமோ அறிவு ஒன்று
எண்ணமோ செயலோ விளைவு ஒன்று
காரணமோ காரியமோ வினை ஒன்று

ஒன்றான ஒன்றை இரண்டாய்க் காணும்
உன்றன் அறிவை என்னென்று சொல்வேன்?
அன்றும் இன்றும் என்றும் இலங்குமதை
ஒன்றும் மனத்தில் அறியத் தகுமே!

கனன்று நிற்கும் வெப்பமா கட்டும்
மனமது இனிக்கும் குளிரா கட்டும்
சினத்துட னெல்லை மீறின் விளைவு
இனம் பிரித்துப் பார்க்க இயலாது

எனக்கும் எனக்கும் - 16

துருவங் களிரண்டு மெவ்வா றொன்றாம்?
துருவாய் மனதில ரிக்கும் வினாவை
குருவா யுனையேற் றெனக்குப் பதிலைத்
தருவா யெனவே மகிழ்ந்து கேட்டேன்.

கயிறதன் நுனி யிரண்டென்று அறிவாய்
பயின்ற முனி அறிவாம் பசைகொண்டு
வியப்புற நுனியைப் பதமாய்ச் சேர்த்தால்
பயிராய் விளைவது ஞானமது தானே!

ஒன்றே அகிலம் எங்கும் இங்கே
நன்றாய் முகிழ்வது அறியக் காண்
இன்றே இரண்டை ஒன்றாய்க் கண்டால்
கன்றாய் காலத்தின் பாலை யருந்தலாம்.

காலம் என்றாய் என்காதில் ஏனோ
காலன் என்றே மாறி விழுந்தது
ஞாலம் முழுதும் கைப்பாவை எனக்
கோலம் செய்கால மென்றா லென்ன?

பஞ்ச பூதமாய் மானிடர் வகுக்க
நெஞ்சதில் புகுந்த பூதமே காலம்
தஞ்சமா யாரும் அண்ட முடியா
விஞ்சவும் முடியா நலமே காலம்

சிருஷ்டியின் தன்மை பலவாய்ச் செய்தல்
திருஷ்டியால் கண்டால் உண்மை விளங்கும்
கருப்பையில் மலராய் மலரும் உயிரும்
நெருப்பையில் சருகாய்ச் சரியும் பிணமாய்

எனக்கும் எனக்கும் - 17

காலம் என்பது நான்காம் பரிமாணம்
காலம் என்பது ஏழாம் அறிவு
காலம் என்பது ஆறாம் பூதம்
காலம் என்பது நிரந்தர பரிணாமம்

காலம் என்பது ஒருவித மாயை
காலம் என்பது இறைவன் வித்தை
காலம் என்பது சிருஷ்டியின் வித்து
காலம் என்பது அனைவரின் சொத்து!

இன்று எளிதாய்த் தெரிவது நாளை
நின்று பார்த்தால் கடின மாகுதே!
சென்ற நேற்று சந்தோச மெதுவோ
இன்று துக்க மழையாய்ப் பொழியுதே!

எந்த ஒன்றையும் இரண்டாய் மாற்ற
பந்த பாசக் கட்டுக்குள் சுழற்ற
சொந்த மாயவன் கையில் இருக்கும்
விந்தை யாமழ காயுதம் காலம்.

ஒளித்து எங்கும் வைக்க வியலா
ஒளியாய் இருக்கும் அவன் உள்ளே
ஒளிந்து விளையாடு மிடமே காலம்
ஒளிர்ந்து நாம் அதைக் காணலாமே!

அண்டம் கணிதம் அவனியில் ஒன்று
கண்ட தைச்சொல்கின் றவன் இல்லை
கண்டு அதைச் சொல்வேன் அறிவாய்
விண்டுநா னிங்கு சொல்வகை யிலே!

எனக்கும் எனக்கும் - 18

எட்ட முடியா ததாய் நினைக்கும்
வெட்ட வெளி எங்கே உண்டு?
கட்டாந் தரை இருப்பது வெளியில்
முட்டா துலகம் நடப்பதும் வெளியில்!

வெளியே வேறெதும் இல்லை என்றே
வெளியும் வெளியாய் உள்ளும் வெளியாய்
களித்திங்கே கிடப்பதாம் வெளியது கால
உளியால் செதுக்கிய சிற்பம் அண்டம்.

பிண்ட அணுவுக்குள் வெளியி லையேல்
அண்ட வெளிக்குள் பிண்ட அணுவேது?
அண்டத் துக்குள் பிண்ட அணுவையும்
பிண்டத் துக்குள் அண்ட வெளியையும்

பிசைந்து இயற்கை செய்த லீலையிது
இசைந்து உணர்ந்து மகிழ்ந்து நோக்கு
அசையும் பொருளும் அசைய இங்கே
தசையும் வேண்டும் வெளியும் வேண்டும்.

இடமா பொருளா எது முதலில்?
சடமா உயிரா எது முதலில்?
வெளியா ஒளியா எது முதலில்?
அணுவா அண்டமா எது முதலில்?

இடமா பொருளா எது முடிவில்?
சடமா உயிரா எது முடிவில்?
வெளியா ஒளியா எது முடிவில்?
அணுவா அண்டமா எது முடிவில்?

முதலு மில்லா முடிவு மில்லா
பதமான பொருளை நாம் இங்கே
இதமாய்த் தேடி எங்கும் போகாது
நிதமும் கண்டு களிக்கலாம் வா!

எனக்கும் எனக்கும் - 19

காலனாம் காலத்துடன் ஓட நினைப்பின்
காலமாம் காலனை வெல்ல முடியுமோ?
காலமாய் நம்மைச் நிலை நிறுத்தின்
காலனை வெல்லும் தேவை யுண்டோ?

பலவாய் உலகில் பரவி யிருந்ததை
இலகாய் இரண்டாய் முன்பு பார்த்து
அலகாய் மனதை வைத்து ஒன்றே
கலமும் ஒன்றே அதிலுறை பொருளும்

என்றே சிந்தை இனிது தெளிந்து
சென்றெ ங்கும் செல்லா திங்கே
ஒன்றே ஒன்றில் ஒன்றாய் இலங்கி
ஒன்றே ஒன்றென்று மனதில் ஒன்றி

யுக யுகமாய் சேர்த்த குப்பை
அகலவே நிலை யதில் நிறுத்தி
அக சுத்தி செய்ய மனதில்
சுக துக்க நிலையு மின்றி

இங்கேயே
இப்போதே
இதுவாய்
இணங்கி

கதையாய் சுழலும் சுழற்சி முறையில்
உதைபடா திங்கே வெளியே றிடவே
புதையும் மணலில் சிதையா திருக்க
விதையது மரமதை விழுங்கும் விதமாய்

எனக்கும் எனக்கும் - 20

பின்னால் காலத்தைத் திருப்ப லாகுமோ?
முன்னால் காலத்தை முந்த லாகுமோ?
தனனால் இயங்கும் காலச் சக்கரத்தில்
இன்னாள் முன்னாள் வருநாள் இல்லை!

ஒன்றே ஒன்றுடன் நன்றாய் ஒன்று
என்றே சொன்னா யதனால் நானும்
கன்றே பசுவை அண்டும் வழியாய்
சென்றே ஒன்றியும் ஒன்ற வில்லையே?

சிரிப்பது வருகுதப்பா உந்தன் செயலில்
தரித்த ஒன்று எதுவென்று முதலில்
பரிந்து நெஞ்சில் முயன்று பார்பாரதில்
விரிந்து விளங்கும் ஒன்று யாதென்று!

எந்த ஒன்றை ஒன்றாய்ச் சொல்வாய்
சொந்த மாயிங்கு முயன்று மியலேன்
நொந்து நானும் புரண்டு கேட்பேன்
வெந்து போம்முன் நயந்து சொல்வாய்

நான் சொன்ன ஒன்று பூச்சியமாகும்
வான் முழுதும் திரண்டு நிற்கும்
ஏன் என்ற கேள்வி கேட்பின்
தான் என்று முன்னின்று விளக்கும்

இல்லா வொன்றே இருப்ப தொன்றாம்
கல்லா தவனே தெளிந் துணர்ந்துபார்
சொல்லில் சொல்லா அனுபவ அறிவில்
மெல்வாய் சிறிதே பசுவா யசைபோட்டு.

எனக்கும் எனக்கும் - 21

சொல்லி லடங்கா எண்ண வியலா
எல்லை யில்லாப் பொருளே இங்கு
எல்லை யுள்ள டங்கும் கணங்களாய்
கல்லாய் உயிர் களுமாய் விளங்கும்.

ஆரம்பமில்லாக் காலம் இது!
முடிவுமில்லாக் காலம் இது!
காலம் வளைந்து சக்கரம் ஆகும்!
சக்கரத்தில் அனைத்தும் விளங்கும்.
இல்லாததில் இருப்பது தோன்றும்.
இருப்பதும் பின்பு இல்லாததாகும்.

அறிவியல் கதை சொல்கின்றேன் நான்.
பூதத்தில் பெரியதில் பெரிது ஆகாயம்.
ஆகாயம் என்பது என்ன?
வெளியே ஏதுமில்லா வெட்ட வெளி.

ஆகாயத்தின் வெளியே என்ன உண்டு?
ஆகாயமே உண்டு!
காயமில்லாப் பொருளே ஆகாயம்!
வியந்து அளப்பாய்
அளப்பிலாப் பொருளை!

மெய்யிலாப் பொருளாம் அது.
குணமிலாப் பொருளும் அது.
அனைத்தும் அடக்கும் அது.
எதிலும் அடங்காது அது.

நிர்மலமாய் இருப்பதாலேயே
நிர்மூலமாக்கும் சக்தியதிலுண்டு.
கண்திறந்து காண வியலா வெளியதை
கண்ணுக்குள் கண் திறந்து முயன்றுபார்.

தொடுத்து அதில் முகிழ்ந்து நிற்கும்
அடுத்த டுத்த பூதங்களை அதன்
மிடுக்கை உன்னை யென்னை வைத்து
தடுத்தி ருக்கும் பையை விரிப்போமா?

(தடுத்திருக்கும் பை - உடல்)

எனக்கும் எனக்கும் - 22

முதலாம் பூதத்தைக்
கண்டு மகிழ்ந்தோம்
தேவனென்று சொல்லாது
பூதமென்று சொன்னதேன்?
என்றாவது நினைத்தாயா?

பூதம் நீ நினைத்ததைத் தரும்
பூதம் அது நினைத்ததைத் தரும்!
பூதம் இருப்பதைப் பிடுங்கவும் செய்யும்!
பூதம் எதையும் விழுங்கவும் செய்யும்!

ஒன்றுமில்லா ஆகாயம்
கனிந்து தந்த பிச்சை
நிறையும் பொருளும்
ஆட்டுவிக்கும் அருளும்!

இரண்டாம் பூதமாய்
கண் முன் விரிவது
ஒளியின் தாய்
சக்தியின் ஊற்று
ஒலியும் அதுவே!
ஆகாயத்திற்கும் மாயையாம்
எல்லையுட் பொருளுக்கும்
மாறாத் தொடர்பது
சொன்னால் சுடாது
தொட்டால் சுடும்
கனன்ற நெருப்பு!

நெருப்பான பூதம்
எங்கும் இருக்கும்
எதிலும் இருக்கும்
இல்லாப் பொருளே
இல்லை இங்கே!

எல்லைக்கு எல்லை
விதிப்பதும் அதுவே
எல்லைக்கு எல்லை
கடப்பதும் அதுவே!

பொருளைப் பொருளாய்ச்
சமைப்பதும் அதுவே
பொருளுக்குள் இருக்கும்
இயக்கமும் அதுவே!

பொருளாய் இலங்கும்
அடுத்த முப்பூதத்தின்
தன்மை யதனைத்
தெளிவாய் இன்னும்
காண்போம் இனிதாய்!

எனக்கும் எனக்கும் - 23

சக்தியும் எல்லையுடையதா?
சக்தி சுருங்குமா? விரியுமா?
சக்தியின் தன்மை யாது?
சக்தியை உணர்வது எவ்வாறு?

குணமில்லாக் குணவானின்
குணம்யாவும் கொண்ட
பிம்பமே சக்தியாம்.
சூனியம் ஒன்றாவது
இங்கே தான்!

சூனியமும் ஒன்றும்
எல்லையில் லாதவையே
அண்டத்தில் உள்ளது
பிண்டத்திலும் உண்டு!

மானிடர் இன்றதைக் கண்டார் நன்று!
சூனியமும் ஒன்றும் கொண்டு இன்று,
தானியமும் வளர் விக்கும் கணினி
தானியங்கி வருவது இதனடிப் படையே!

சக்தியின் தன்மை காண சோதனை
பக்தியால் செய்யாமல் மனித அறிவு
யுக்தியால் செய்தே மகிழ்ந்து கண்டால்
பக்தியாய் நாத சக்தியை வணங்குவாய்நீ!

நான் சொல்வதையெல்லாம் எடு!
ஒரு ஒலிபெருக்கி
ஒரு ஒலிவாங்கி
சொன்னதும் கொணர்ந்தாயே!

ஒலி பெருக்கி அருகே
ஒலி வாங்கி சென்றால்
நடந்தது என்ன துணிந்து
சொல் என் காதில்.

அட! நாராசமாய்
சொல்லவியலா கூச்சலாய்
ஒலி பெருக்கி கிழிந்துவிட
மயிர்க்கூச்செறி சத்தம் வருதே!

ஆம், ஒலி பெருக்கியின் சத்தம்
ஒலி வாங்கிக்கு செல்ல,
அது மீண்டும்
ஒலி பெருக்கிக்குச் செல்ல
அங்கு ஒரு சக்கரமாய்
சக்தியின் முடிவிலி
தோன்றும். அதுவே
ரீங்காரம் ஆகும்!
ஓம்.ஓம்.ஓம் என்று
மனதுள்ளே சொல்லிப்பார்
சக்தியின் ரீங்காரம்
காதுக்குள்
மனதுக்குள்
உள்ளத்துக்குள்
உனக்குள்
எனக்குள்
கடலலைக்குள்
கடற்சங்குக்குள்
ஒலிக்கும் ஓசை
நாத பிம்பம்
நாத பிரம்மம்
ஜதியாய் ஒலிக்குதே!

சக்தியின் எச்சம்
சக்தியின் மிச்சம்
சக்தியின் எல்லை
உண்டா சொல்!

நன்றிங்கு உணர்ந்தேன்
சக்தியே பிம்பமாய்
தோன்றும் அழகை
வர்ணிக்க வார்த்தையின்றி!

முதலாம் பொருளை விந்தென்றும்
இரண்டாம் சக்தியை நாதமென்றும்
விந்து நாதக் கூட்டே சிருஷ்டியென்று
முறையாய் அறிந்தார் முன்னோரும்

சிருஷ்டியின் மறுபெயர் மாயை
மாற்றம் ஒன்றே மாறிலியாய்
முடிவு ஒன்றே முடிவிலியாய்
திரும்பத் திருந்த வருவது அது!

மூன்று நான்கு ஐந்தென்று
ஒன்றான மாயை வருகுதப்பா
சென்று எங்கும் காணவேண்டா
நின்று இங்கே காணலாமே!

அணுவுக்குள் அணுவாயும்
அண்டத்துக்கே சூட்சுமமாயும்
சூனியத்தினின்று சக்தியால்
கிடைத்தது இவ்வுலகம்.

எனக்கும் எனக்கும் - 24

எதிர் எதிர் அமர்ந்து இப்படி
புதிர் போட்டு மயக்காதே என்னை
சதிர் ஆடும் சமயமா இது?
கதிர் கொண்டு உண்மை பரப்பு.

மூன்றாம் பூதம் வாயு
நான்காம் பூதம் நீர்
ஐந்தாம் பூதம் பூமியென
விளங்கும் மாயை ஒன்றே!

இதைத் தான் புதிரென்றேன்!
ஒன்றே எப்படி மூன்றுமாகும்?
கொஞ்சமாயினும் உண்மை உரை!
தெளிந்து மறவேன் வாழ்நாளிலே.

விளங்கும் ஒரே பொருளே
இங்கே சக்தியின் தன்மையால்
மூன்றாய் கண்முன் தோன்றும்
சூலமாய் மனதில் ஊன்றும்.

பண்டம் காணாது சிதறி
அண்டம் முழுதும் விரவி
விண்டிட முடியாத் துண்டாய்
கண்டிட விளங்கும் வாயுவே!

வாயு என்பதும் பொருளே
சாய வைப்பதும் அதுவே
மூன்றாம் பூதமும் அதுவே
சக்தியின் பதிவும் அதுவே.

வாயுவின் ஊடே
சக்தியை சக்தி
கொண்டு கிளறின்
விளைவது நீராம்
அதுவே திரவம்
என்னுமொரு பூதம்!

அதே திரவத்தில்
இன்னும் கொஞ்சம்
சக்தியை ஊட்டின்
பனியாய் உறைந்து
சக்தி பொதிந்து
வெளியும் நிறைந்து
விளையுது பூமி
என்னுமொரு பூதம்!

வெளியும் சக்தியும்
மறைந்து செய்யும்
ஜால வித்தையாம்
ஞால முத்தை
கண்டு அறி.

சக்தியின் மாற்றத்தால்
ஏற்படும் முடுக்கமே
பூதமாய் மாறும்.
பெருக்கம் வாயு
உருக்கம் நீர்
இறுக்கம் பூமி
எல்லாம் சக்தி
எங்கும் சக்தி
எதிலும் சக்தி

எனக்கும் எனக்கும் - 25

இறை என்ற ஒன்று
எங்கும் இல்லை ஏன்?
எல்லாம் அதுவேயாயின்
எங்கே என்று தேடுவாய்?

அதனதன் இடத்தில் அதுவாய்
அதனதன் நேரத்தில் அதுவாய்
அதனதன் இயக்கத்தில் அதுவாய்
ஒன்றுமில்லா ஒன்றே எல்லாமாய்
இலங்கும் விளங்கும் முழங்கும்
தன்மை அறிந்தேன் பூரணமாய்!

சூட்சுமமும் விரிபொருள்
அண்டமும் ஒன்றாகவே
தோன்றும் அதிசயம்
மணலின் எண்ணிக்கையிலும்
விண்மீன் எண்ணிக்கையிலும்
எளிது காண்!

உயிர் என்றால் என்ன?
இயக்கமே உயிரா?
கல்லில் உயிர் உண்டா?
உயிருக்கு அழிவுண்டா?

பொருளென்றோ உயிரன்று
எல்லையில்லாப் பொருள்
எல்லையுடன் விளங்கையில்
எல்லையுள் பொருளும்
எல்லையில் உயிரும்
துலங்கும் காண்பாய்!

இயக்கமில்லை உயிரின் காரணம்
இயக்கமோ உயிரின் காரியம்!
காரியமின்றியும் காரணம் இருக்கும்
காரணமின்றிக் காரியம் கிடையாது!

காரியமில்லாக் காரணம் உத்தமம்
காரணமதிகக் காரியம் மத்திமம்
காரியமதிகக் காரணம் அதமம்
முக்குணம றிந்து சொன்னேன்

எனக்கும் எனக்கும் - 26

உறைந்து பொருளாய் விரி வெளியும்
நிறைந்து உயிராய் ஒளி சக்தியும்
மறைந்து ஆடும் நடனத் தில்முழு
மறையும் நாம் காண லாமே!

வெளியின் ஒளி பிம்பம் சக்தி
வெளியின் திரு உருவம் பொருள்
வெளியே உடலாய் ஒளியே உயிராய்
உளியாய் செதுக்கும் சிலையே அண்டம்.

வெளியின் விளையாட்டு காலம்
ஒளியின் விளையாட்டு பூதம்
காலமும் பூதமும் வரைவதே
கோலமாம் பூரண வாழ்வதே.

ஒரு உயிரில்
பல்லுயிர் நிறையும்
அண்டம் முழுதும் ஒரு உயிர்
ஒவ்வோர் உடுமண்டலம் ஒரு உயிர்
மண்டலத் துளியாம் விண்மீன் ஓர் உயிர்
விண்மீன் சுற்றும் கிரகம் ஓர் உயிர்
கிரகத்தின் ஓரறிவில் ஓர் உயிர்
ஈரறிவு முதல் ஆறறிவிலும் ஓர் உயிர்
உடலுக்குள் பாகமொன்றிலும் ஓர் உயிர்
பாகத்தின் ஒவ்வோர் அணுவிலும் ஓர் உயிர்
அணுவின் ஒவ்வோர் துகளிலும் ஓர் உயிர்
வெளி எங்கோ உயிர் அங்கே!

நீ கேட்டாய் இத்தனை நாள் கேள்வி
நான் கேட்பேன் இன்று ஒரு கேள்வி
நல்ல பதில்நீ சொன்னாலது வேள்வி
உனக்கும் அறிவுண் டென்று நிரூபி!

இத்தனையும் சொல்லிவிட்டேன்
அண்ட பேரண்ட பிறப்பு யாவும்.
நீ யார்?
நான் யார்?

எனக்கும் எனக்கும் - 27

பதிலாய் கேள்விக்கு விளங்கி
நிழலாய் வெயிலுக்கு இறங்கி
அனலாய் குளிருக்கு இசைந்து
சலமாய் தாகத்தைத் தீர்த்து

இருளாம் அறியாமை நீக்கும்
பொருளாய் எனக்கு விளங்கிய
அருளாம் உனக்கு யானறிந்ததை
சுருங்கவே பதிலென உரைப்பேன்!

நான் யார்?
உடலோ பொருள்,
உயிரோ சக்தி,
நானோ உடலுமில்லை.
உயிரென்றும் தோன்றவில்லை.
பிறப்பின் முன் நினைவில்லை.
இறப்பின் பின் தெரியவில்லை.
இவ்வுடலும்
இவ்வுயிரும்
இருப்பதாலே நான் உண்டு
இவையிரண்டு இல்லாவிடில்
நான் யார்?

உடலும் உயிரும் தாண்டி
என்னுள் எதுவும் உண்டோ?
ஒருவேளை அறிவாக இருக்குமோ?
இல்லை இதுவும் மாயையோ?
சொன்னாயே இல்லாததில்
இருப்பது தோன்றுமென்று!
ஒருவேளை குழப்பம்
ஒருவேளை தெளிவு
சரியாய்த் தெரியவில்லையே?

சரியாகத் தெரிவதெல்லாம்
முன்பை விட
குழம்பியது மட்டுமே!
சுயம் என்றும்
நான் என்றும்
என்னுள் ஆடிய
குரங்கைக் காணோமே?
கேள்வி கேட்டால்
ஓடி ஒளிந்துவிட்டதே?
இருள் சூழ்கின்றதே?

உடலை நானென்று கொண்டால்
ஒரு காலை வெட்டினால்
எப்பாகம் நான்?
உயிரை நானென்று கொண்டால்
என் பேருயிர் இறந்தால்
பல்லுயிராய் ஒவ்வோரணுவிலும்
உயிருண்டே!
நான் யார்?

நான் என்ற எண்ணம் எங்கே?
தேடிப் பார்க்கின்றேன்.
மூளையின் வேலை
உயிர் சொன்னபடி
உடலை நடத்துவது!
நானே தீக்குள் விரலைவிட்டால்
சட்டென்று அநிச்சையாய் மூளை
வலித்து கையை இழுக்குதே!
மூளையின் உபயம் அறிவு!
அறியும் அறிவு நானில்லையே!
அறிந்த அறிவும் எனக்கில்லையே!
நான் யார்?

எனக்கும் எனக்கும் - 28

யார் யார் என்றே
தோலை உரிக்கின்றேன் நானும்!
வெங்காயத் தோலாய் உரிந்து
கண்களில் உவர்நீர் பரப்ப
உள்ளேது மில்லாது போகுமோ?

பூட்டை உடைத்தால் புதையலா?
உடைத்த பூட்டே புதையலா?
தெரியாது தவிக்கின்றேன் நானே
தேடித் தேடித் திரிகின்றேனே!

நான் என்ற பிரக்ஞை
சுயம் என்ற ஒழுங்கு
என்று எனக்கு ஆரம்பம்?
என்று எனக்கு முடிவு?
என்றே யோசிக் கின்றேன்!

குழந்தையாய் தவழ்கையில் நானில்லையே!
கிழவனாய்த் துவல்கையில் நானில்லையே!
குழப்பத்தைத் தெளிவிக்க யாருண்டிங்கே?
இழந்துவிடும் எண்ணமாய் நானிருக்குமோ?

எனக்கென்று ஆடை வேண்டுகையில் உடலாகவும்!
எனக்கென்று ஆசை வேண்டுகையில் உயிராகவும்!
சுகிப்பது,
லயிப்பது,
தவிப்பது,
நான்.

தெளிந்து உணர்ந்து சொல்ல விழைவேன்
நெளியும் சுயநலத்தின் உருவம் நான்
களித்து சுகம் துய்ப்பதும் நான்
விளிக்க முன்னே நிற்பது நான்

ஆசைப் பந்தின் துள்ளல் நான்
மனிதன் என்ற பெயரில் நான்
புகழை என்றும் விரும்பும் நான்
எதிலும் முன்னின்று நிற்க நான்

நான் மனமே!
மனம் எதுவோ அது நானே
மனம் எங்கோ அங்கு நானே
மனம் எப்படியோ அப்படி நானே

எனக்கும் எனக்கும் - 29

இனங்காண முடியாது தவித்துக் கலங்கும்
மனமாய் என்னைக் கண்டேன் மயங்கும்
வனத்திலே தனியே விட்டு விடாநல்ல
தனமாய் வந்தாயே நீயார் சொல்வாயோ?

நீயார் என்பதில் எத்தனை குழப்பமோ?
நானார் என்பதில் அத்தனை தெளிவு!
நீயார் என்பதைக் கண்டறிந்து விட்டதால்
நானார் என்பதில் ஐயமே இல்லையே!

உன்னை மட்டும் தொடர்வதும் நானே
உன்னைத் தாண்டி இருப்பதும் நானே
உன்னைத் தோளில் சுமப்பதும் நானே
உன்னை விட்டு விலகாததும் நானே

எந்தன் வேலை உன்னைப் பார்ப்பது!
உந்தன் லீலை என்னைப் பாராதது!
சிந்தனை செய்தே உன்னுள் பாராய்
நிந்தனை செய்தாய் முன்பே என்னை!

சாட்சியாய் நான் செய்வதைக் காணும்
ஆட்சியைப் புரியும் மனசாட்சியே நீயாய்
காட்சிகள் அனைத்தும் அறிந்து எந்தன்
மீட்சிக்கு வழிகோலிடவே வரமும் தாராய்!

சரியாய்க் கண்டாய் என்னை சாட்சியாய்
விரிவாய்ச் சொல்வேன் எந்தன் தன்மை
அரிதான என்னைச் செயலின் முன்பே
புரிந்தாய் உணர்ந்தாய் மகிழ்ந்தேன் நானும்!

நீ உண்டேல் நானும் உண்டே!
நீ இல்லையேல் நானும் இல்லை!
நீயோ நானுனைத் தடுப்பதாய் நினைப்பாய்!
நானோ உன்னைத் தாங்கவே நினைப்பேன்.

நமது சபையில் வாக்குவாதம், செயலின்
முன்னும் நடக்கும் பின்னும் நடக்கும்!
நான் ஜெயித்தால் உனக்கும் திருப்தி
நீ ஜெயித்தாலோ தேயும் மகிழ்ச்சி.

எனக்கும் எனக்கும் - 30

மனமாம் நானும் சாட்சியாம் நீயும்
மனமாய் நீயும் சாட்சியாய் நானும்
என்றே சிலநாள் இடம் மாறலாமோ?
எந்தன் ஆசையும் நிறைவேறக் கூடுமோ?

விபரீத ஆசையிது அறிந்திட வில்லையோ?
நீதிபதி என்றேனும் செயல்படல் ஆகுமோ?
செயலைத் தூண்டுவேன் செயல்பட மாட்டேன்
செயலைச் செய்கையில் தக்கது சொல்வேன்!

மனமதில் ஆசையாலே உடலுயிர் தூண்டி
இனம் பிரியாது கொடுஞ்செயல் புரிகையில்
சினமது கொண்டு திருத்தினால் உன்னை
மனமதில் தெய்வமாய் தொழலா மானால்

செய்கையில் வெறும் சாட்சியாய் இருந்தும்
உய்கையில் மவுனியாய் கிடந்தும் பலன்
எய்கையில் என்னை வெந்த புண்ணில்
மொய்க்கும் வண்டாய் இரட்டை வேடமேன்?

அன்றே சொன்னேன் நீயென்றோ நானன்று!
இன்றும் சொல்வேன் அதையே மாறேன்
முன்பே தடுக்கும் என்னைக் காணாமலே
நன்றாய் புலனடக்கம் செய்வாய் செயலில்

பதறுவேன்
கதறுவேன்
தவிப்பேன்
முறைப்பேன்
முறையிடுவேன்
கெஞ்சுவேன்
மிஞ்சுவேன்
காலிலும் விழுவேன்
அரட்டியும் பார்ப்பேன்

மசியவும் மாட்டாய்
மதிக்கவும் மாட்டாய்
கண்ணை மூடுவாய்
காதைப் பொத்துவாய்
நானிருப்பதை மறப்பாய்

உடலை உயிரை ஆட்டிப் படைத்து
உந்தன் ஆசை வெந்தே போமட்டும்
உன்னை மட்டும் நீயே பார்ப்பாய்
உந்தன் துணைவன் என்னைப் பாராய்.

எனக்கும் எனக்கும் - 31

நீ என்னைத்
தவிர்க்க நினைத்தால்
அகங்கார வீட்டினுள்ளே
ஆசைப் பூட்டெடுத்து
அறிவுச் சாவிகொண்டு
லாவகமாய்ப் பூட்டிச்
சாவியைத் தொலைத்து
ஆட்டத்தை ஆரம்பிப்பாய்!

நானா விடுவேன்?
நீ தொலைத்த
அறிவுச் சாவியைக்
கஷ்டப்பட்டுக் கண்டறிந்து
ஆசைப் பூட்டுடைத்து
ஆசையாய்ப் பார்த்தால்
அகங்கார வீடிடிந்து
நீயும் நொந்து
என்னையும் வருத்தி
கேவலச் செயல்
புரிந்து தவித்திருப்பாய்.

நீ என்னுடன்
ஒத்துழைக்க நினைத்தாலே
அன்பெனும் வீட்டிற்குள்ளே
பணிவாம் கதவை
அறிவுச் சாவியால்
சாந்தமாய்த் திறந்து
உள்ளிருந்து இருவரும்
நற்செயலைச் செய்யலாமே!

இதில் உனக்கென்ன இத்தனை அக்கறை?
பதில் அறியக் கேட்கின்றாய் உனக்குள்
எனது உறுத்தல் உனக்கு நரகமாகும்!
உனது திருப்தி எனக்கு லட்சியமாகும்!

எனக்கும் எனக்கும் - 32

முயன்று பார்த்தால் அறிய லாமே
செயலில் இல்லை நல்லத ல்லதென
நயந்து என்னை மகிழ்வித்த நீயே
பயக் குழிக்குள் ஆழ்த்து கின்றனை.

ஞாபகம் இருக்கின்றதா அதுவும் உனக்கு?
ஆபத்துக் காலத்தில் நினைவுக்கு வருமே!
சாபத்திற் காளானால் துணைக்கு இழுப்பாயே!
தாபத்தைத் தீர்க்கவும் உனக்கது வேண்டுமே?!

செயலதைச் செய்வது உடலுயிர் தானே?
இயல்வதைச் செய்வதால் பயனு மதற்கே!
சுயமாய் எனக்கெது செயக் கூடுமெனவே
பயந்தர என்னைச் சாடுவதும் ஏனோ?

வயலுக்கு உண்டோ பயிரின் பயன்?
கருவிக்கு உண்டோ இசையின் லயம்?
எய்தவன் நீயிருக்க அம்பை நோவேனோ?
பொய்யது சொல்லேன் வம்பன் உன்னிடம்!

மானிடர் படைத்த கணினி காண்பாய்
கணினி கொண்ட வன்பொருள் உடலாம்
கணினியில் பாய்மின் சாரம் உயிராம்
எனின் இயக்கும் மென்பொருள் மனமே!

வன்பொருளில் நன்மை தீமை இல்லை
மின்சாரத்தில் நன்மை தீமை இல்லை
மென்பொருளில் நச்சும் உண் டல்லவா?
வடித்தவனின் எச்சம் அதில் தெரிகின்றதே!

உன் செயலால் உருவான அலை
உன்னைத் தேடியே மீண்டும் வருமே
அலையின் வீச்சில் மீள நினைத்தால்
பணிந்து முழுகு அல்லது தாண்டிவிடு!

பணிந்து விட உனக்குப் பிடிக்காதே?
தாண்டி விடவே ஆசைத் திரியைத்
தூண்டும் வகை கண்களில் தெரியுதே
ஆண்டு அலையைத் தாண்ட வகையிதே.

அலையில் பலமுறை முத்தும் கிடைக்கும்
அலையில் பலமுறை சொத்தும் கிடைக்கும்
அலையைத் தாண்டியதை இழக்கத் தயாரா?
அலைபாயும் உன்னைக் கேட்டுச் சொல்வாய்!

பணிந்து முழுகின் அவை எனக்கா?
அணிந்து முத்தை அழகு பார்க்கவே
அணியாய் உன்னுடன் சேரத் தயார்
துணிந்து சொல்வாய் எவ்வா றென்றே.

அலையில் பலமுறை சுழற்சியும் இருக்கும்
அலையில் பலமுறை அயற்சியும் இருக்கும்
அலைக்குள் விழுந்தே ரசிக்கத் தயாரா?
அலைபாயும் உன்னைக் கேட்டுச் சொல்வாய்!

இருதலைக் கொள்ளி எறும்பாய் ஆக்கினாய்
விடுதலை பெறுவது எப்போது சொல்வாய்
தறுதலை என்னை மீட்பது எங்ஙனம்?
கடலலை போல் செயலது துரத்துதே!

எனக்கும் எனக்கும் - 33

அழகிய
பொருளைக்
கருவாக்கி
உருவாக்கித்
திருவாக்குபவன்
அனுபவிப்பதில்லை.

அனுபவிப்பவன்
அனுபவம்
பொருளில்
இருப்பின்
உருவாக்குபவன்
தவறேயாம்.

பொருளையும் மறந்து
பொருளால் அனுபவித்தால்
உலகம் அறியும்
உருவாக்குபவன் பெருமை!

இவை யாவும் உலகியல் மெய்யே
சுவை படவே அளப்பாய் நாளும்
எவை யெவையென தேடிப் பார்த்தும்
அவை கொள்ளுமே நிலையா குணமே.

ஏதுமில்லாப் பொருளே
பொருளை உருவாக்கி
பொருளாய் உருமாறி
துய்ப்பதும் அதுவாய்
தூய்மையும் அதுவாய்
இங்கே இருக்குமானால்

அது
வினையா?
விளையாடலா?
விளையாட்டு வினையாகுமோ?
விளையாட்டு வினையாகுமே!

உனக்கும் எனக்கும் எண்ணம் புத்தியென
பாழும் இயற்கை கரங்களில் திணித்து
சுதந்திரம் கொடுத்து அடிமை யாக்கியது
நாமோ அடிமையாகி சுதந்திர மடையலாம்!

விதி வழிப் பயணம் இவ்வாழ்க்கை
நிதி கொண்டு மாற்றலாமோ யாக்கை?
மதி கொண்டு வெல்லவும் ஆகுமோ?
கதி என்றே தொடர்ந்து செல்வோம்!

நடப்ப தனைத்தும் விதியா லென்றால்
கடக்கும் வழியெ ன்றுமொன் றென்றால்
கடனைத் தீர்க்கும் தேவை யுமேனோ?
அடக்கம் எனக்கினி தேவை தானோ?

செயலால் யாரைத் திருப்தி செய்வாய்?
இயலா தெனவே பந்தயம் செய்வேன்
முயன்று பார்த்தால் முடியாது நிச்சயம்
செயலால் திருப்தி விளையாது சத்தியம்.

உன்னை உன்னால் திருப்தி செயாவிடில்
உலகம் முழுதும் திருப்திப் படுமோ?
உன்னால் உன்னை திருப்தி செய்தால்
உலகம் முழுதும் திரும்பிப் பார்க்குமே!

ஏன் செய்ய வேண்டும் எதையும்?
செய்தால் ஆகப் போவது என்ன?
செயாவிடில் போகப் போவது யாது?
பரமபதப் பாம்பாகி ஆதிக்கே திருப்பினாய்!

எத்தனை முறை சொலினும் சலிப்பதில்லை
எத்தனை முறை சொலினும் நினைவிலில்லை
வித்தாக முறை செய்து நிகழ்த்திவிட்டால்
முத்தாக முறை கொண்டு புரிந்துவிடும்.

விதியின் விளையாட்டே வினையின் விதை
அவரவர் வினை யெச்சம் அவருக்கேயாம்
வினையின் அலையே அடுத்த அலையின்
வித்தாய் அமைந்தே தொடரவும் செய்யுதே!

எனின் அலையின் தொடக்கம் எங்கே?
அலை ஏன் அடிக்க ஆரம்பித்தது?
அலைக்கு முன் அமைதியாய் இருந்ததோ?
அலைக்குப் பின் அமைதியாய் ஆகுமோ?

அனைத்தும் விதியே காரணம் என்றால்
அவரவர் வினையே அவருக்கு என்றால்
இயற்கை அழிவாய் ஆயிரம் இறப்பதேன்?
பூகம்பப் பிளவாய் லட்சம் மரிப்பதேன்?

நீதிக்கு என்றும் பார்வையும் இல்லை
நீதிக்கு சோகம் மகிழ்ச்சியும் இல்லை
நீதிக்கு எதுவும் தேவையும் இல்லை
நீதிக்கு முன்னே அனைத்தும் சமமே.

ஆயிரம் கொசுக்கள் தினமும் சாகும்
ஆயிரம் பசுக்கள் தினமும் வேகும்
ஆயிரம் சிசுக்கள் தினமும் போகும்
ஆயிரம் திசுக்கள் நொடியில் தோன்றும்

அனைத்தும் இயற்கைக்கு என்றும் ஒன்றே
வருவதும் போவதும் இயற்கையின் இயல்பே
மனமும் எண்ணமும் அறிவும் சாட்சியும்
இருப்பதாலே மானுடன் மட்டும் விதிவிலக்காமோ?

இத்தனை துன்பம் தரும் மனமா நான்?
இத்தனை துன்பம் துய்க்க மனம் சாபமோ?
இத்தனை துன்பம் வரும் பிறப்பும் பாவமோ?
இத்தனை துன்பம் நீக்கச் செய்வது யாது?

எனக்கும் எனக்கும் - 35

விளை யாட்டாம் வாழ்க்கை தன்னை
விளை நிலமாய் விதையூன்றி நல்
வினை நிலமாய் ஆக்காமல் தரிசு
களை நிலமாய் ஆக்கி வைத்தாயே!

எதுவு மிலாதோர் நிம்மதியா யிருக்க
எல்லா மிருந்தும் முழுதும் இழந்ததாய்
நிரந்தர மாயெனை விட்டுப் பிரிந்ததாய்
தவிப்பதே என் நிலை யானதேன்?

கிரிக்கெட்டில் உலகெலாம் மூழ்கி விட
நாம்மட்டும் கால்பந்தில் ஆழ்ந்து விட
விளையாட்டு முடியு முன்னே விதியின்
வினையாட்டு அறிந்து கொள்வோம் வா!

கோல் நான்கு ஊன்றி இருபுறமும்
தோல் பந்தை இலக்கில் சேர்க்க
கால் கொண்டே போராடும் வீரரைப்
போல் என்னை மதித்தே அழைத்தனை!

விளையாட்டாய் பார்க்காமல்
விளையாடியும் பார்க்காமல்
களைப்படையும் உன்னுடைய
தளையுடைக்கும் பணியைச்
சளைக்காமல் செய்வேன்நான்!

ஆர்வத்தில் ஜெயித்திருப்பர் இலக்கு தேடி
ஆர்ப்பரிப்பில் மகிழ்ந்திருப்பர் ரசிகர் கோடி
மூர்க்கமாய்த் தடுமாறிச் செய்வினையால் மூடி
போர்க்களக் கோழையாய் தவிக்கின்றாய் ஓடி

வாழ்க்கை என்பதோர் விளையாட்டு.

அதைப் பார்வையாளராய் ரசிப்பவருண்டு
அதைப் போர்வாளாய் ஜெயிப்பவருமுண்டு
பார்வையில் ஊறி ரசிகர் வினைமறப்பார்!
ஆர்வத்தில் மூழ்கி வீரர் வினைமறப்பார்!

தவிப்பவர் யார் தெரியுமா?
உன்போல் சிவப்பட்டை வாங்கியவர்!

ரசிக்கவும் முடியாமல்
ஆடவும் முடியாமல்

விளையாட்டின் விதியை நொந்து
காரணம் தானென்றே அறியாமல்
முன் செய்த வினையே
பின் வந்து வாட்டிவிட
வந்தது உந்தன் தவிப்பு!

அழகழகாய் மணலாலே மாடி வீடுகட்டி
குழந்தைகள் ஆடும் கடற்கரை தனிலே
இழப்பதாய் அழுமோ ஆடி முடித்ததுமே
பழக்கமாய் அதைக் காலால் இடிக்கையில்?

பாழும் மனிதரும் அனாதை யாகவே
கூழும் இன்றிப் பாரினில் திரிந்தாலும்
வீழும் மட்டும் அவர்க்கும் உண்டிங்கே
சூழும் எதிர்காலம் என்பதே நியதி

வாழ்க்கை யெனும் ஓட்டைப் படகில்
ஆழ்கடல் உலகில் நாளெனும் துடுப்பால்
வீழ்ந்து போகவே விரைந்து போவாய்
மூழ்கும் சமயத்தில் அழவும் செய்வாய்

இத்தனை இருப்பினும் இயற்கை நமக்கே
சுத்தமாய்த் தந்ததே சுதந்திர மூச்சை
வித்தாய் விதியது ஒன்றாய் இருப்பினும்
நித்தமும் ஆட்டம் புதிதாய்த் தோன்றுமே!

விதி!
வினைச்சொல்லா?
பெயர்ச்சொல்லா?
நான் நினைத்தால் அது வினைச்சொல்
நீ நினைத்தால் அது பெயர்ச்சொல்

இது எனக்கான உரிமை இல்லை.
இது எனக்கான கடமை ஆகும்.
இது உனக்கான சுமை இல்லை.
இது உனக்கான சுவை ஆகும்.

விதி வலியது
விதி வலிப்பது
விதி எளியதே
விதி இனியதே
விதி இல்லை
விதி இருக்கிறது
எல்லாமே உண்மை!

வரவில்லை யான் இங்கே குழப்ப
தரவில்லை பொய் எதுவும் வலிய
வரமாய் விதியையும் தந்தேன் உன்
கரத்தினில் விதித்துத் தான் பாரென்றே.

எனக்கும் எனக்கும் - 37

விதிவிலக் கில்லா விதி நிறுவென
சதியேது மின்றித் தந்தேன் கரந்தனில்
மதியெனும் அழகுக் கொடை நெறியில்
உதித்தால் எழுப்பு; தூங்கப் போகிறேன்!

விலக்கில்லா விதி வேண்டு மென
இலக்கை விதித்துப் பொல்லா விதியை
வலக்கையில் வலியத் திணித்து எனைக்
கலக்கத்தில் ஆழ்த்தி மௌன மானாயோ?

விதியென்ற ஒன்று இருக்கு மானால்
கதியென்று எந்தன் கரத்தில் வந்ததை
விதியின்றேல் விலக்கு மிலை யென
உதிர்ந்திடவே சுக்கு நூறெனக் கிழித்து

நோக்கம் நிறை வேறத் துள்ளவே
தேக்கம் இனி யேதும் இல்லையே!
காக்கும் மதி நிறையவே இருக்கு
போக்கிட மிலாவிதி யினியெதற்கு?

சிரித்திடவே வழி யொன்று செய்தாய்
புரிந்திடு கொஞ்சம் அதிகமதி யாலே
விரித்திடும் விதி இல்லை என்பதும்
தரித்திடும் விதி யென்பத றிந்துநீயே!

வீட்டுக்கும் உண்டு விதி உறவாக
நாட்டுக்கும் உண்டு விதி சட்டமாக
காட்டுக்கும் உண்டு விதி சுழற்சியாக
ஏட்டுக்கும் உண்டு விதி இலக்கணமாய்.

விதியில்லா பரவு நெடுஞ் சாலையும்
விதியில்லா அழகு தரைக் கோலமும்
விதியில்லா மேன் மக்கள றிவியலும்
கதியில்லா அலங் கோல மாகிவிடும்.

பயன்பல பாரில் நயம்படத் தந்திடும்
செயற் கையாம் மானிடர் விதிக்கும்
பயம்பல பாரில் வியந்திடத் தந்திடும்
இயற் கையாய்த் தோன்றிய விதிக்கும்

வேற்றுமை என்ன?
ஒற்றுமை என்ன?
போற்றியே இங்கு
தேற்றவே வந்தேன்.

மானிடர் விதியோ சூழ்நிலை பார்க்கும்
நானிலந் தனை நானூறாய்ப் பிரிக்கும்
மேனியில் ஓடும் உதிரத்தைப் பிரிக்கும்
வானின்று விழும் நீரையும் பிரிக்கும்!

விளக்கம் கண்டே விதியும் ஓயும்
இளக்கம் கொண்டே நாளும் மாறும்
விதியைச் செய்தவர் விதியை மீறி
சதியைச் செய்யும் வகையது மாமே.

இயற்கை விதியோ யாரும் செயாதது
சுயம்பாய்த் தோன்றி வழி நடத்துவது
இயம்பாது உண்மையின் வழி நடப்பது
தயங்காது மண்ணில் நீதி நாட்டுவது.

எவரும் சமமே
எதுவும் சமமே
எங்கும் சமமே
எல்லாம் சமமே
எப்போதும் சமமே

சமத்துவமே இயற்கை விதியாம்
இமயமும் ஆழ்கடலும் ஒன்றாம்
சுமக்கும் மானிடர கங்காரத்தை
அமலமாக்கும் வித்தை அதுவாம்.

பற்றாய்ப் பள்ளத்தில் நீரது விரைவதும்
வெற்றிடம் நோக்கி வாயு விரைவதும்
இற்றிங்கு போகவே பூமியைப் பிளப்பதும்
கற்றிடு தந்நிலை சமமாய் ஆக்கவே!

விதியே விலக்காய் விலக்கும் விதியாய்
நிதியாய் நமக்கு விளங்கும் விதியை
மதியொடு நாளும் கலங்காது பற்றின்
பதியாம் இறைவன் பக்கம் சேர்க்கும்!

எனக்கும் எனக்கும் - 39

எளிதான விதியிது ஒன்றே இருந்தும்
களிக்கவே மனிதர் செயல்பட அவர்க்கு
உளியாய் சுதந்திரம் தனையும் கொடுத்து
தெளிவாய் எதிர்காலம் செதுக்க அளித்து

பரிசு தந்த வாழ்வதையே ஒதுக்கி
அரிசி தரும் நிலமாய்க் கருதாது
தரிசு நிலமெனும் நினை வதுவாய்
வரிசை கொண்டே வாழ்வ தென்ன?

இதிலெங்கே இருக்குது எனக்கு சுதந்திரம்?
மதிகொண்டு செபித்தேன் பலவித மந்திரம்!
கதிகலங்கச் செய்வதோ உந்தன் தந்திரம்?
பதிலெங்கே உன்னிடம் ஒன்றும் காணோம்?

இயந்திரமாம் கணினியிலும் விளை யாட்டை
முயன்றிங்கே புகுத்திட்டார் மானிடர் நன்றாய்
இயன்றவரை விளையாடும் பள்ளிச் சிறாரும்
நயந்திடவே மறுப்பரே செயித்து விட்டால்!

ஒருமுறை இதுதான் இப்படித் தானென்றே
உருக்கொள் ஆட்டமே சலித்து விடுமாயின்
கருக்கொள் வாழ்வில் விதியொன்றே யாயினும்
சுருக்கமாய் சலிப்பேதும் தோன்றா வண்ணம்

புதுப்புது யுக்தியும் புதுப்புது உத்தியும்
மெதுவாய் அவனியின் கரந்தனி லளித்து
அதுவாய் கொண்டு செல்வது இயற்கை
பதுமையாய் நின்று நிதானித்துப் பாராய்!

சிரிப்பில்லா மனிதனும் உண்டோ?
அழுதறியா மனிதனும் உண்டோ?
சிரிப்பதிலும் அழுவதிலும் நானுண்டோ?
சிரிப்பதிலும் அழுவதிலும் நீயுண்டோ?

எனக்கும் எனக்கும் - 40

சிரிக்கவும் அழவும் சிறிய வேறுபாடாம்
எரித்தும் மிஞ்சும் எலும்பில் இருக்காம்
சிரிப்பில் அதிகம் எலும்பு அசையுமாம்
கரிக்கும் கண்ணீரில் சிறிதே ஆடுமாம்.

பாடமாய் விஞ்ஞானம் சொல்வது இதுவே
வேடமாய் போர்த்திய உடலது தரிக்கும்
ஆடலால் மகிழ்ந்து விளைவது சிரிப்பும்
வாடலால் நெகிழ்ந்து வழிவது கண்ணீரும்!

காரியம் செய்வது உடலா னாலும்
வீரியமாய் தூண்ட நீயே வேண்டும்
சீரிய எண்ணம் முகிழ்வதும் உன்னில்
பாரிய ஆசை வெளிப்படும் உன்னில்

வண்ணமாய் உன்னில் எண்ணம் உருவாக
எண்ணமாம் அதனின் குழந்தை ஆசையாம்!
திண்ணமாம் ஆசையால் விளையுது காரியம்
கிண்ணமாய் அறுவடை உடலது வாங்கும்.

ஆலமரத்தின் வேராய் விளங்கி உணர்வின்
மூலமாகவே உலகை இயக்கி நிகழ்த்தும்
மூலமென்றும் மனமாம் நீயே ஆயினும்
மலமாம் மகிழ்வும் துக்கமும் உனக்கிலை!

செய்தவன் என்னும் காரணத் தாலே
பொய்யாய் உலகில் திரிந்து வரும்
மெய்யாம் உடலே அழும்; அரற்றும்!
எய்தவன் நீயிருக்க அம்பு நோகுமே!

உந்தன் பங்கு எத்தனை உண்டோ
எந்தன் பங்கு அத்தனை உண்டு
முந்தித் தூண்டும் கோல் நீயானால்
பிந்திக் கிண்டும் கோல் நானாவேன்!

நீயும் சிரிப்பதில்லை
நானும் சிரிப்பதில்லை
நீயும் அழுவதில்லை
நானும் அழுவதில்லை

துக்கமும் சுகமும் என்றும் உடலின்
பக்கமும் நெருங்க வேண்டா மெனின்

கக்கத்தில் இருக்கும் ஆசையை நீக்கு
திக்கெட்டில் அலையும் எண்ணம் சுருக்கு.

விடுதலை கிடைக்குமே இவ்வாறு செய்தால்
விடுதலை கிடைக்குமே செயாமல் போயினும்
விடுதலை கிடைக்கும் செய்தால் இன்றே!
விடுதலை கிடைக்கும் செயாவிடின் மரணத்தில்!

எனக்கும் எனக்கும் - 41

மரணம்!
மானுடப் பயத்தின் விதை.
மனிதர் அச்சத்தின் மூலம்.
மறுக்க முடியா எதிர்காலம்.

தொடக்கம் இருப்பின் நிறைவும் உண்டு
மடக்க நினைப்பின் முடியவும் கூடுமோ?
நடக்கும் பாதை ஒன்றே! விரைவில்
கடக்க நினைப்பின் முடியவும் கூடுமோ?

பிரம் மாண்டமான அண்டம் முழுதும்
இரக்கம் கொண்டே பரவிய வெளியொளி
கரத்தினைக் கொண்டு இனிதே பிசைந்து
வரமாய்க் கொடுத்த கூட்டு உடலுயிர்!

நல்லுயிர் ஒன்றாய் ஆக்கம் கொண்டே
பல்லுயிர் நிரம்பும் பகட்டான கூட்டில்
வல்லிய எண்ணமும் ஆசையும் உண்டு
மெல்லிய எண்ணமும் அன்பும் உண்டு

உள்ளத்தை அள்ளவே மலையி னின்று
பள்ளத்தில் விழுந்து தெளிந்து ஓடும்
தெள்ளிய அருவியின் நீரோ டையாய்
கள்ளமின்றிக் கடலில் கலப்பதே மரணம்.

ஆரம்ப அழகு முடிவில் இல்லையே?
சாரம் கொண்ட பந்தல் ஒருநாள்
பாரம் தாங்க இயலாது அதுவாய்க்
கோரமாய் விழுந்து நொறுங்கு வதழகோ?

கர்ப்ப மதிலு தித்து அவனியில்
அர்ப்ப ணித்து மகிழ்ந்தும்; வெறியில்
சர்ப்ப மெனச் சினந்தும் சீறவென
அர்த்த மில்லா வாழ்வு மேனோ?

உடலின் ஆயுள் முடிந்தால் மரணம்
உயிரின் ஆயுள் முடிந்தால் மரணம்
எனக்கு ஆயுள் உண்டோ மரணிக்க?
உனக்கு ஆயுள் உண்டோ மரணிக்க?

எனக்கும் எனக்கும் - 42

வெம்பிய பழத்துக் கழகில்லை என்றும்
எம்பிக்கை கொள்ளும் இலக்கும் அழகு
நம்பிக்கை கொண்டு வாழ்பவர் அழகு
நம்பிக்கை தொழ வாழ்பவர் அழகு

பதிந்திடும் பாதத்தில் குழந்தை நடைபழகும்
விதியிங்கு மூத்தோர்க் குமுண்டு வாழ்வெனும்
நதியிங்கு சக்கரமென்றே யுணர்த்தவும் தானே!
முதியவர் அழகில்லை சொன்னது யாரிங்கே?

எல்லாம் சொல்வது எளிதே எமக்கும்
கல்லான என்னையும் நாளும் கரைக்கும்
அல்லல் படுத்தும் பயமொன்று கொண்டு
புல்லான மானிடன் மரணம் வெல்வானோ?

மரணம் போரானால் வெல்லவும் முடியுமோ?
கரணம் போட்டாலும் வென்றிடக் கூடுமோ?
சரணம் போட்டாலும் ஆகவும் செய்யுமோ?
மரணம் பரிசானால் வெல்லவும் வேண்டுமோ?

பிறப்பு பரிசானால்
இறப்பும் பரிசாகும்
பிறப்பு இழப்பானாலே
இறப்பும் இழப்பாகும்.

ஆழ்கடல் அமைதியாய் பூமியைப் போர்த்தும்
அடிக்கடி கரையினில் அலையினால் ஒத்தும்
மீளவும் வெந்நுரையுடன் சமுத்திரம் மீளும்!
காலமெலாம் நடக்கும் இதுபோல் வாழ்வும்!

அப்பால் என்ன உண்டு மரணத்தில்?
இப்போதே மெய் தெரிந்தால் எனக்கு
எப்போதும் வாட்டும் பயமே தெளியும்
தப்பாமல் சொல் முழுதும் எனக்கு!

உடலது கரைந்து வெளியாகிப் போகும்
உயிரது கரைந்து ஒளியாகிப் போகும்
உனக்கும் எனக்கும் இருக்கின்ற கட்டு
உடைந்து போகவே நெருங்கிப் போவோம்!

பிறப்புக்கு முன்னால் நீயும் இல்லை
பிறப்புக்கு முன்னால் நானும் இல்லை
இறப்புக்கு பின்னால் நீயும் இல்லை

இறப்புக்கு பின்னால் நானும் இல்லை

மழலைக்குள் என்று அரும்பியது ஆசை?
அழவைக்கும் அன்றே பிரிந்தோம் நாமே!
தாண்டும் நீயோ அழகிய மனமாய்!
வேண்டும் நானோ பழகிய நீதியாய்!

இணைவோம் மரணத்தில் இனிது காண்!
துணையாய் நான்வந்து சேர்தல் பயமோ?
அணை கொண்ட வெள்ளந் திறப்பதாலே
பிணை கொண்ட கயிறும் அறுந்ததாமே!

தெளிவின்னும் தோன்ற வில்லை எனக்கு
ஒளியில்லா இருளில் முடங்குதல் போலே
வளியில்லா பிராணன் துடித்தலும் போலே
களிப்பெலாம் கரையுது முடிவை நினைப்பின்.

களித்திடவே வைத்திடும் ஆட்டமே வாழ்க்கை
துளிர்த்திடும் போக்கில் சோகமுடன் ஆனந்தம்
அளித்திடுமே முடிவில் தோல்வியுடன் வெற்றி
புளித்திடுமோ அடுத்ததோர் ஆட்டம் ஆட?

ஆட்டத்தின் உச்சம் முடிவென்றால்
ஓட்டத்தின் உச்சம் மரணமன்றோ?
நாட்டமுடன் உனக்கு விளக்குவேன்
பாட்டுடனே நிலாச் சோறையும்
ஊட்டும் உந்தன் அன்னைபோலே!

தொடங்கிய ஆட்டம் முடிவின்றி எப்போதும்
தொடர்ந்தால் யாருக்கும் தோன்றுமே சலிப்பு
கிடந்திழிபட்டு நொந்து வசைபட்டு வாழாது
அடங்கிப் போவதே யாவர்க்கும் உவப்பு!

போகப் போக ஆட்டம் சலிக்கும்
மோகம் கூட தீண்ட மறுக்கும்
யோகம் என்பது எது வென்றாலே
தாகம் தீர்க்கும் முடிவ துதானே!

கிழவனாய்ப் போனால் மரணமே விடுதலை!
இழந்திடா திளமையைக் கையில் கொண்டால்
குழந்தையாய் என்றும் காலம் நிலைத்தால்
முழங்கலாம் மரணப் போரினை வென்று!

மூலத்தை அடையும் சத்திய நுகர்ச்சியில்
ஞாலத்தைக் காக்கும் நித்திய பயிற்சியில்
காலத்தை நிறுத்தும் அனுதின முயற்சியில்
ஜாலத்தை விஞ்ஞானம் நிகழ்த்தும் விரைவில்!

அதன்பின் என்ன சொல்லுமுன் மெஞ்ஞானம்?
அதன்பின் எங்கு செல்லுமுன் வாய்ஜாலம்?
அதன்பின் எதையும் வென்றிடுமே மனிதகுலம்
அதன்பின் அழிவும் தோன்றிடுமே அழிவுக்கும்!

அணுகுண்டு தயாரித்த விஞ்ஞானம் தன்னை
அணுகாமல் ஒதுங்கி இருப்பவனாய்க் கண்டு
நுணுக்கமாய் அறியாமல் இருக்கும் உந்தன்
அணுகுமுறை கண்டு வியந்தே னிணையே!

மெஞ்ஞானம் விஞ்ஞானம் வேறு வேறாமோ?
மெஞ்ஞானம் எனக்குத் தான் சொந்தமோ?
விஞ்ஞானம் உனக்குத் தான் சொந்தமோ?
அஞ்ஞானம் நீக்கினால் இரண்டு மொன்றே!
விஞ்ஞானம் மெஞ்ஞானம் இல்லையானால்
பொஞ்ஞானம் ஆகிவிடாதோ? பிழையாகாதோ?

ஞானம் ஒன்றே என்பதை உணர்வோம்!
வானம் அளவுண்டு என்றே அறிவோம்!
தானம் செய்வளர் செல்வம் அல்லவா?
ஊனம் இல்லா ஞானம் கொள்வோம்.

முடியா தென்பது இல்லை பேருலகில்
விடியா தென்பது இல்லை; இருந்தும்
நொடியால் செய்யும் மனிதர் அறிவு
ஒடியாமல் செய்யுமா ஒடிந்த கிளையை?

காலத்தை நிறுத்தும் யோசனை கண்டாய்
ஓலத்தை நிறுத்தும் ஆசையும் கொண்டாய்
பாலத்தில் நின்றே பாலத்தை நொறுக்கும்
ஏலத்தில் பங்காய் மும்முறை கேட்டாய்!

ஏதோ எனக்குத் தெரிந்த அறிவியலை
காதோ ரமாய்ச் சொல்வேன் கேளாய்
பாதகமாய்ச் சொல்ல வருத்த மில்லை
சாதகமாய்ச் சொல்லி மகிழ்வு மில்லை.

இரு வழியுண்டு காலத்தை நிறுத்தவே
அரு மையாய் அறிவியலும் கண்டது!
தரு வாயொரு யோசனை வாகனமாம்
பருப் பொருளைப் பின்னால் செலுத்த!

இயக்கத்தை முதலில் நிறுத்திப் பின்னர்
தயக்கத்தைப் போக்கி பல்சக்கரம் மாற்றி
இயக்கத்தைத் துவக்கின் வாகனம் பின்னால்
மயக்கமின்றிப் போகுமே யாருக்கும் தெரியுமே!

சரியெனச் சொன்னாய் சபாஷ் போட்டேன்
பரியென ஓடும் காலத்தை நிறுத்தவே
வரியாய் விதியைச் சொல்வேன் கேளாய்
சரியாய் இயக்கம் நிறுத்திடு என்றே!

பொடியான அணுவில் இருக்கும் இயக்கம்
தடியான எதையும் இயக்குவதும் அதுவே
நொடியும் அசையாது அணுவை நிறுத்த
முடியும் அறிவியலால் பரபூச்சிய நிலையில்!

எனக்கும் எனக்கும் - 45

பரபூச்சிய நிலை என்றால் என்ன?
பரபரக்கும் நிலை கொண் டெனக்கு
தரமாக நிலை நிறுத்திக் கொஞ்சம்
வரமான நிலை பற்றிச் சொல்வாயே!

ஒரு நிலையில் தண்ணீரும் ஆவியாகும்
ஒரு நிலையில் கல்லதுவும் ஆவியாகும்
ஒரு நிலையில் தண்ணீரும் உறையுமே!
ஒரு நிலையில் அணுவுமது உறையுமே!

ஆவிக்கும் உறைவுக்கும் காரணங் காணில்
ஏவிடும் சக்தியே காரணமா யறிந்தோமே
பாவிக்கும் சக்தி மாற்றத்தால் பொருளினுள்
ஜீவிக்கும் வெப்ப மாற்றம் நிகழுமென்றே!

பூச்சியத்திற் சென்று விட்டால் நல்ல
ராச்சியந் தான் கிட்டிடுமே! காலத்தின்
வீச்சி லிருந்து தப்பலாமே! பொருளில்
பீச்சி வரும் வெப்பமதை நீக்கிட்டாலே!

அணுவில் இந்நிலையில் இயக்கம் இல்லை!
அணுவில் இந்நிலையில் காலம் இல்லை!
அண்டத்தில் இந்நிலையில் இயக்கம் இல்லை!
அண்டத்தில் இந்நிலையில் காலம் இல்லை!

உறைந்து அணுவும் குமைந்து போகும்
சிறைக்குள் நீயும் நானும் பிரக்ஞையின்றி
மறைந்து போகும் நல்வழியும் இன்றி
மறையாக வாழலாம் காலத்தை வென்றே

-273.15 டிகிரி செண்டிகிரேடு/0 கெல்வின்/-459.67 டிகிரி பாரன்ஹீட் வெப்பநிலை - இது தான் பரபூச்சிய நிலையாகும். இந்த வெப்ப (குளிர்) நிலையில் அணுவே உறைந்து, குமைந்து இயக்கமின்றித் தடுமாறி முடுக்கமின்றி நின்று விடும்! அப்போது காலம் சூன்யமாகும்! அப்போது காலத்தை அளக்கக் கருவியும் இல்லை. காலமும் இல்லை!

இன்னுமொரு நெடுவழி சொல்வேன் அதையும்
இன்முகத்துடன் கேட்டு செய்திடுவா யதன்படி
தன்னிகரற்ற அணுவினுள்ளே இயக்க மதை
தன்னிலை யின்றி வேகமாய் முடுக்கென்றே!

ஒரு நிலையில் தண்ணீரும் அலையாகும்

ஒரு நிலையில் கல்லதுவும் அலையாகும்
ஒரு நிலையில் வளியதுவும் அலையாகும்
ஒரு நிலையில் அணுவதுவும் அலையாகும்

இந்த நிலை அதிவெப்ப நிலை!
இந்த நிலை கண்காணும் நிலை!
இந்த நிலை மண்காணா நிலை!
இந்த நிலை ஒளிவேக நிலை!

முடுக்கத்தால் இயக்கம் உயர்த்தின் அணுவில்
சடுதியிலே மாறிவிடும் சக்தியின் மாற்றத்தால்
விடுதிக்குள் நில்லா ஒளியதுவாய் அலையாக
விடுவித்தே அணுவதுவும் பறந்து சென்றிடுமே!

அணுவில் இந்நிலையில் இயக்கம் உச்சம்!
அணுவில் இந்நிலையில் காலம் மிச்சம்!
அண்டத்தில் இந்நிலையில் இயக்கம் உச்சம்!
அண்டத்தில் இந்நிலையில் காலம் மிச்சம்!

பாலத்தின் மேல்நின்றே பாலத்தை இடித்து
ஜாலத்தை செய்மனமே கொண்டு நல்ல
காலத்தை சோதிக்கும் விஞ்ஞான மதனாலே
மூலமாம் சோதியின் அடிமுடி காணலாமோ?

சூன்யமாய் காலத்தை நிறுத்தி விடில்
சூன்யமாய் பிரக்ஞையும் மாறி விடுமே!
சூன்யத்தில் சக்தி இன்மையால் என்றும்
சூன்யத்தில் சிவம் உண்டு சவமாகவே!

முடிவிலியாய் காலத்தை செலுத்தி விடில்
முடிவிலியாய் பிரக்ஞையும் இருந்தி டுமே
முடிவிலியாய் அனுபவிக்க உடல் இன்றி
முடிவிலியான அலையா யதுவு மாறிடுமே!

ஒரு விநாடிக்கு 29,97,92,458 மீட்டர்கள் (அதாவது ஒரு மணி நேரத்திற்கு 107,92,52,848.8 கிலோ மீட்டர்கள் அதாவது ஒரு நேனோ விநாடியில் ஒரு அடி) வேகமே ஒளியின் வேகமாகும்.

எனக்கும் எனக்கும் - 46

முடிவில்லா ஒளியில் உடலில்லா உணர்வும்
முடிவில்லா குளிரில் உணர்வில்லா உடலும்
முடிவின்றி எனக்கு இருந்தென்ன லாபம்?
துடிப்புடனே இன்று போலென்றும் நன்றென

கொழிக்கின்ற உடலோ உயிரோ இல்லா
வழியின்றிச் சிதைந்து போகா திருக்க
வழியொன்றி ருந்தால் சொல் லெனக்கு
அழிவின்றி உடலோடு யிரும் பிழைக்கவே!

ஒளியை உருவாக்கும் வித்தை எளிது
ஒளியாய் உருவாகும் வித்தை அரிது
ஒளியாய் உலகை ஆளலாம் எனினும்
ஒளியொடு இயைந்த சூனியம் அரிதரிது.

வெளியும்
ஒளியும்
வெளியில்
வெளியொளியாய்
மிளிர்ந்ததால்
ஒளிர்ந்ததே
இவ்வாழ்க்கை.

நித்தியமாய் இவ்வாழ்வு வேண்டும் எனின்
முத்தியமாம் பழமழுகாது நீடிக்க எண்ணின்
சத்தியமாய் தற்கால ஐன்ஸ்டீன் சொன்னபடி
பத்தியமாய் சார்பின்றி இருந்தால் கூடும்

பூமியில் நீயிருப்பின் பூவுலக வாசி
புதனிலே நீயிருப்பின் புதனின் வாசி
அழகுநீள் ரயிலிலே ஒரு பிரயாணி
காண்பதுவே வாழ்வென் பதைநீ யோசி

அவரவர் இடத்தில் அவரவர் வருவார்
அவரவர் இடத்தில் அவரவர் இறங்குவர்
எவரவர் ரயிலதில் என்றென்றும் தங்குவர்?
எவரவர் ரயிலிலே தங்கவும் விரும்புவர்?

ஏறு முன்பே இறங்கும் இடமும்
நிச்ச யித்தே ஏறுவர் எனினும்
இறங்கு மிடத்தை நீள் பயணத்தில்
உனைப் போல் யாரே தேடுவர்?!

அதுவரை காணும் காட்சியில்
பொதுவாய் மெய் மறந்தாலும்
மெதுவாய் அமர்ந்து யோசித்தால்
முதுமைகொள் மரணம் இயல்பே.

ஈர்ப்பினை உடைய பேருலகந் தனிலே
ஆர்ப்பரித்து நாம் நடை பயின்றாலும்
சார்ந்த உலகின் அடிமை நாமென்றே
சார்பியல் தத்துவம் விளங்கச் சொல்லும்

ஒளியின் வேகம் வெளியில் சென்றால்
பூமியில் காலம் எளிதாய் ஓடியிருக்கும்
ஆனால் விண்வெளி வாகனத் தினுள்ளே
உண்டான மாறாக் காலமும் மாறுமோ?

பிறப்பு காலம் சார்ந்ததெனின்
இறப்பு காலம் சார்ந்ததெனின்
வாழ்வும் காலம் சார்ந்ததே!
காலம் சார்ந்த பிறப்பும்
காலம் சார்ந்த வாழ்வும்
காலம் சார்ந்து மடியும்!

காலம் என்னும் பாலத்தில் நின்றாய்
பாலம் உடைந்தால் நீ நிற்பாயோ?
பாலம் சாராது நிற்க முடிந்தால்
காலம் சாராது வாழவும் முடியும்!

எனக்கும் எனக்கும் - 47

பள்ளம் தள்ளும் உவகை கொண்டே
தெள்ளத் தெளிவாய் காய் நகர்த்தி
கள்ளம் கபடம் சூதும் கொண்ட
உள்ளது காலம் சார்ந்தா உள்ளது?

ஏற்றம் கொள்கையில் உவகையுங் கடுந்தடு
மாற்றம் கொள்கையில் கவலையும் என்றும்
மாற்றமின்றி வழங்கும் காலத்தின் கோலமோ?
தேற்றங்கொள் காலமும் எந்நாளோ அறியேனே!

நிலையற்ற வாழ்வாய் நீயஞ்சும் வாழ்வேதான்
நிலையான வாழ்வாய்க் காலமெலாம் உண்டே!
கலையாத கோலமாய்க் காலமெலாம் அழியாது
கலையான சிலையாய் நிற்கின்ற முறைகாண்!

உலகத்தை இயக்கும் உணவாய் நம்முடலும்
உலகமாய் இயங்கும் உணர்வாய் நம்முயிரும்
கலகமின்றி மரணத்தில் ஆகுமானால் கவலைக்
கலக்கம் இருக்குமோ? கண்டின்றே தீர்ப்போமே!

வெளியும் ஒளியும் ஆடும் திருக்கூத்தில்
ஒளியும் ஒளியும் பெரு(க்)கும் வேகத்தில்
வெளியின் நிறையை வெளிக்கே அளிக்கும்!
ஒளியும் வகையின்றி சக்தியும் பெருகுமப்பா!

மரணத்தில் நிகழ்வது இதுவே உண்மை
கரணம் கொண்டே என்றும் சுழலவே
மரணமே உலகம் இயங்கக் காரணம்!
சரணம் கொண்டே உலகும் வணங்கும்

மரணத்தில் பயம் கொண்டு உழலாதே!
மரணத்தில் ஜெயம் உண்டு மயங்காதே!
மரணத்தில் தியாகம் உண்டு மறவாதே!
மரணத்தில் வாழ்வும் உண்டு துவளாதே!

நல்லது அல்லது இல்லா உலகினில்
கல்லது வாழும் வாழ்வு வாழ்ந்திட
கல்லாய்ச் சமையும் மரணம் வந்திடில்
வல்லம் கொண்டே அதையும் ஏற்போம்!

என்றோ கிடைக்கும் மரணமதில் இணைவோமோ?
தென்றலொடு மலையாய் இருவரும் இணையவே
இன்றொரு நல்மரணம் எளிதில் கிட்டட்டும்
என்றும் மரணமில்லா வாழ்வும் உணர்வோமே!

இவ்வாறு நித்தமும் மரணம் கொண்டு, இணைந்து வாழ்ந்து என்ன தோன்றுகின்றது என்பதை நானும், நானும் சொல்வது வரை காத்திருப்பீர்களா?